(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**.387/2019 அ.சா.6

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மூலப்பொருள் |
| Father's name | : | |
| Village | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது அவனியாபுரம் செம்பூரணி ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பால்மாடு வைத்து தொழில் செய்து வருகிறேன். இன்றிலிருந்து சுமார் 7 வருடத்திற்கு முன்பு காலை 06.00 மணிக்கு மாடு அவுத்து கட்டும்போது நான் மாடுகட்டியிருந்த இடத்தில் இரத்தம் தரையில் கிடந்தது. போலீசார் என்னிடம் தரையில் இரத்தம் கிடந்தது சம்பந்தமாக விசாரித்தார்கள். நான் எனக்கு எதுவும் தெரியாது, விசாரித்து சொல்கிறேன் என்று சொன்னேன். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என் முன்னிலையில் இரத்தக்கறை படிந்து கிடந்த துணி ஒன்றை எடுத்தார்கள் மற்றும் வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் கண்டுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியில் கண்டுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் ).**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

போலீசார் என் முன்னிலையில் இரத்தக்கறை படிந்த துணி ஒன்றையும், இரத்தக்கறை படியாத துணி ஒன்றையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை.</u>**

Sd/- மூலப்பொருள்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.06.23 05:02:27 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.